# இராஜ்யம்/சபை நிலைநாட்டப்படுதல்

*இராஜ்யம்/சபையானது நோக்கத்தினால் உண்டாயிற்று, தேவனுடைய திட்டங்கள் மற்றும் நோக்கங்களில் இது நித்திய காலம் முழுவதும் நிலவிற்று (இ.வ. எபே. 3:10, 11).*

*இது வாக்குத்தத்தத்தில் இருந்தது. பழைய ஏற்பாடு முழுவதிலும் இராஜ்யம்/சபையானது தீர்க்கதரிசனத்திலும் வாக்குத்தத்தத்திலும் இருந்தது. கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயம் நிலைநாட்டப்படும் என்றும், கர்த்தருடைய வசனம் எருசலேமிலிருந்து புறப்படும் என்றும் ஏசாயா கூறினார் (ஏசா. 2:2, 3; 1 தீமோ. 3:15 கர்த்தருடைய வீட்டை சபை என்று அடையாளப்படுத்துகின்றது). ரோம ராஜ்யத்தின் ஆளுகையின் நாட்களில் தேவனுடைய இராஜ்யம் நிலை நாட்டப்படும் என்று தானியேல் தீர்க்கதரிசனம் உரைத்தார் (இ.வ. தானி. 2:44).*

*இது முன்னேற்பாட்டில் இருந்தது. ரோமாபுரி ராஜ்யத்தின் நாட்களில் கிறிஸ்து தமது சுய ஊழியத்தைத் தொடங்கினார். அவருடைய சுய ஊழியத்தின்போது இராஜ்யம்/சபையானது அதற்கான முன்னேற்பாட்டில் இருந்தது. இயேசுவும், யோவான் ஸ்நானனும் இராஜ்யம் "சமீபத்தில்" இருந்ததாகப் பிரசங்கம் செய்தனர் (ஏறக்குறைய அங்கிருந்தது; மத். 4:17; 3:1, 2). இயேசு, தமது இராஜ்யம் ஆவிக்குரிய ஒரு அமைப்பாக இருந்ததை வலியுறுத்தினார் (யோவா. 18:36), மற்றும் அவர் "இராஜ்யம்" "சபை" என்ற சொற்களை ஒன்றிற்குப் பதில் மற்றொன்றைக் கூறும் வகையில் பயன்படுத்தினார் (மத். 16:18, 19).*

*இயேசு, தமது ராஜ்யம் "பலத்தோடே" வருவதாயிருந்த தாகக் கூறினார் (மாற். 9:1). தமது உயிர்த்தெழுதலுக்குப் பிறகு அவர், சீஷர்களிடம் பரிசுத்த ஆவியானவர் வரும்போது அவர்கள் பெலனடைவார்கள் என்றும், அவர்கள் எருசலேம் தொடங்கி அவருக்குச் சாட்சிகளாய் இருப்பார்கள் என்றும் கூறினார் (அப். 1:6-8). அந்தப் பெலன் வரும்வரை அவர்கள் எருசலேமில் காத்திருக்க வேண்டியிருந்தது; அந்நேரத்தில்*

*பாவமன்னிப்புக்கான மனந்திரும்புதல் அவருடைய நாமத்தினாலே "எருசலேமிலிருந்து தொடங்கி" (லூக். 24:45-49) பிரசங்கிக்கப்பட வேண்டியிருந்தது.*

*இது பெலத்தில் இருந்தது (தொடர்ந்து இருக்கின்றது). கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றுக்குப் பின்வந்த முதல் பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் வந்தார் (அப். 2:1-4). இவ்விதம் பெலம் வந்தது; இவ்விதமாய் இராஜ்யம்/சபை நிலைநாட்டப்பட்டது.*

*ஏசாயா முன்னுரைத்தது போல, சுவிசேஷப் பிரசங்கமானது எருசலேமில் தொடங்கியது (அப். 2:29-38). விசுவாசித்து, மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெற்றுக்கொண்ட மக்கள் இராஜ்யம்/சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர் (அப். 2:41, 47;* KJV*). அந்தத் தருணத்திலிருந்து இராஜ்யம்/சபையானது இருந்து கொண்டிருப்பதாகப் பேசப்படுகிறது (அப். 5:11; 8:1, 3; கொலோ. 1:13; எபி. 12:28; வெளி. 1:6).*

*கிறிஸ்து இப்பொழுது தமது இராஜ்யத்தின்மேல், பரலோகத்திலிருந்து ஆளுகை செய்கிறார், உலகத்தின் முடிவின் போது, அவர் தமது மறுவருகையில், விசுவாசத்தோடு தம்மைப் பின்பற்றுகிறவர்களைத் தம்மோடு பரலோகத்திற்கு எடுத்துச் செல்ல (யோவா. 14:1-3) வரும்வரை தொடர்ந்து ஆளுகை செய்வார் (1 கொரி. 15:24-27).*

*நீங்கள் இராஜ்யம்/சபையில் இருக்கிறீர்களா?*

# சொற்பொருள் அகராதி

***அப்போஸ்தலர்*** (*apostolos*) – *''அப்போஸ்தலர்'' என்ற வார்த்தை கிரேக்க மொழியிலிருந்து எழுத்துக்கெழுத்து அப்படியே மொழியாக்கப்பட்ட வார்த்தையாகும். இது இரு வார்த்தைகளின் சேர்க்கையாக உள்ளது; apo இது கிரேக்க மொழியில்* "from" *(''இருந்து'') என்று பொருள்படும் ஒரு முன்னிடைச் சொல் ஆகும், இத்துடன் "அனுப்பப்பட" என்று பொருள்படும் stello என்ற வார்த்தையின் ஒரு வடிவம் சேர்ந்துள்ளது.* "Apostle" *என்ற வார்த்தையின் சொல்லுக்குச் சொல் சரியான பொருள்* "[*வெளியே அல்லது இருந்து*] *அனுப் பப்பட்ட ஒருவர்'' என்பதாகும். வேதாகமத்தின் அநேக வார்த்தைகளைப் போலவே* "apostle" *என்ற வார்த்தையும் விசேஷித்த அல்லது தனிப்பட்ட பொருளில் பயன்படுத்தப்பட முடியும். விசேஷித்த பொருளில் இயேசுவினால் அனுப் பப்பட்ட பன்னிருவரையும் (மற்றும் பவுலையும்) குறிக்க இச்சொல்லைப் பயன்படுத்த முடியும், அல்லது "அனுப்பப் பட்ட" யாரேனும் ஒருவரைக் குறிக்க இது பொதுவான ஒரு பொருளில் பயன்படுத்த முடியும். நடபடிகளில் லூக்கா இவ்வார்த்தையை, பன்னிருவரைக் குறிக்கும் ஒரு விசேஷித்த பொருளிலேயே வழக்கமாகப் பயன்படுத்தியுள்ளார். ஆயினும், சில சந்தர்ப்பங்களில் லூக்கா இவ்வார்த்தையைப் பொதுவான பொருளிலும் பயன்படுத்தியுள்ளார். எடுத்துக் காட்டாக, அப். 14:14ல், பர்னபா ஒரு அப்போஸ்தலரென்று அழைக்கப்படுகிறார். அவர் சீரியாவின் அந்தியோகியாவில் இருந்த சபையால் அனுப்பப்பட்டார் (அப். 13:1-3). "அப்போஸ்தலர்" என்ற வார்த்தை பொதுவான ஒரு பொருளில் பயன்படுத்தப்பட்டதற்கான மற்ற சில எடுத்துக் காட்டுகளுக்கு, ரோமர் 16:7; 2 கொரி. 8:23; பிலி. 2:25 ஆகியவற்றைக் காணவும். ("அப்போஸ்தலர்" என்று சில இடங்களிலும் "ஸ்தானாதிபதி கள்'' என்று சில இடங்களிலும் மொழியாக்கம் செய்யப் பட்டுள்ளது.) இந்நாட்களில், சபையிலிருந்து அனுப்பப்படும் ஒருவரைக் குறிக்க* "missionary" *என்ற லத்தீன் வார்த்தையைப்*

*பயன்படுத்துகின்றோம்;* “missionary” *என்ற வார்த்தை* “apostle” *என்ற வார்த்தையின் பொருளுக்கு ஒத்ததாய் உள்ளது.*

**ஞானஸ்நானம்** – Baptism (*baptisma or baptismos*) – *“Baptism” என்பது கிரேக்க மொழியிலிருந்து எழுத்துக்கெழுத்து அப்படியே மொழியாக்கப்பட்ட வார்த்தையாகும். Baptisma என்றால் “முழுகுதல்” என்று பொருள், baptismos என்பது “முழுகுதலாகிய செயல்பாடு” என்று பொருள்படும் - இவை யிரண்டுக்கும் மிக லேசான வேறுபாடுதான் உள்ளது. Baptizo (“baptidzo என்று உச்சரிக்கப்படுவது”) என்பது இதன் வினை வடிவம் ஆகும், இதன் பொருள் “முழுக்காட்ட” என்பதாகும். முழுக்காட்டுதல் எதில் நடைபெறும் என்பதை சொற் பொருளின் சந்தர்ப்பத்தைக் கொண்டே முடிவு செய்ய இயலும். உருவகமாக இதைப் பயன்படுத்துகையில், மூழ்கடிக் கப்படுதலை இது குறிக்கிறது (எடுத்துக்காட்டு: இயேசுவின் உபத்திரவமாகிய ஞானஸ்நானம், மாற். 10:38, 39).*

**கிறிஸ்து** (*Christos*) – *“மேசியா (Messiah)” என்ற எபிரெய வார்த்தையின் கிரேக்க வடிவம் “Christ (கிறிஸ்து)” என்பதாகும். இவ்விரண்டுமே “அபிஷேகம் செய்யப்பட்ட (ஒருவர்)” என்ற பொருளைத் தருகின்றன. பழைய ஏற்பாட்டில், ஆசாரியர்கள், தீர்க்கதரிசிகள் மற்றும் இராஜாக்கள் ஆகியோர் அபிஷேகம் செய்யப்பட்டனர், ஆகவே இச்சொல் விளக்கம் இவர்களில் யாருக்கேனும் பயன்படுத்தப் பட்டிருக்க முடியும். பிரதான ஆசாரியர், “அபிஷேகம் பண்ணப்பட்டவர்” (லேவி. 4:3) என்று அழைக்கப்பட்டார். தீர்க்கதரிசிகள், “அபிஷேகம் பெற்றவர் கள்” என்று அழைக்கப்பட்டனர் (சங். 105:15). இச்சொல்வழக்கு இஸ்ரவேல் ராஜாவுக்குக் குறிப்பாகப் பயன்படுத்தப்பட்டது (சங். 2:2; 18:50). சவுல் “கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்ட வராய்” இருந்ததால் (1 சாமு. 24:6; 26:9; இ.வ. 2 சாமு. 1:14), அவரைக் கொலை செய்ய தாவீது மறுத்தார். யூதர்கள் தங்கள் கடந்த கால மகிமையை மறுபடியும் கட்டியெழுப்ப தாவீது அரசரின் சந்ததியில் “மேசியா” வருவார் என்று எதிர்பார்த் திருந்தனர். இயேசுவே அவர்கள் எதிர்பார்த்திருந்த மேசியா அல்லது கிறிஸ்து ஆவார் (மத். 16:16; மாற். 14:61, 62; யோவா. 4:25, 26). இயேசு ஒரு ஆசாரியராகவும் (எபி. 4:14), ஒரு*

தீர்க்கதரிசியாகவும் (அப். 3:22), ஒரு இராஜாவாகவும் (1 தீமோ. 6:15) இருப்பதால், "அபிஷேகம் பண்ணப்பட்டவர்" என்ற சொற்பொருளானது இவ்வெல்லாப்பாங்கிலும் அவருக்கு ஏற்புடையதாகும். ஆயினும், யூதர்கள் "மேசியா/கிறிஸ்து" என்ற வார்த்தையைக் கேட்கும்பொழுது ஒரு இராஜாவைப் பற்றியதாகவே அடிப்படைச் சிந்தனையிருந்தது. இயேசுவைக் "கிறிஸ்து" என்னும்போது, நாம் அவரை இராஜாவாகவே அறிவிக்கின்றோம்.

**சபை** (ekklesia) – கிரேக்கக் கூட்டு வார்த்தையான ekklesia (அல்லது ecclesia) என்பது Church என்று மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. இக்கிரேக்க வார்த்தை இன்றைய நாட்களில் ஆங்கிலத்தில் "Ecclesiastes" (church man) மற்றும் "ecclesiastical" ("pertaining to the church") என்ற வார்த்தைகளில் பயன்படுத்தப்படுகிறது. Ekklesia என்ற வார்த்தையானது, ek (வெளியே) என்ற முன்னிடைச் சொல்லும் kaleo (அழைக்க) என்ற வினைச் சொல்லின் ஒரு வடிவமும் இணைந்ததாகும். இதன் நேரடிப் பொருள் "வெளியே அழைக்கப்பட்ட (வர்கள்)" என்பதாகும். இவ்வுலகம் சார்ந்த சமுதாயத்தில், இவ்வார்த்தை "ஒரு மக்கள் கூட்டத்தை" (அதாவது கூடும்படி அழைக்கப் பட்டவர்களை) குறிக்கிறது (இ.வ. அப். 19:41). ஆயினும், இயேசு இந்த வார்த்தைக்கு ஒரு சிறப்பான பொருளைத் தந்தார் - அவருக்குச் சொந்தமான "அழைக்கப்பட்டவர்கள்" (மத். 16:18) - நடபடிகள் நூலிலும் இந்த சிறப்பான பொருளிலேயே இது பயன்படுத்தப்படுகிறது. இவ்வார்த்தை உலகளாவிய சபை (அப். 2:47; KJV), உள்ளூர் சபைகள் (அதாவது பிராந்திய சபைகள்; ரோமர் 16:16) அல்லது ஆராதிக்கக் கூடும் ஒரு கூட்டம் (1 கொரி. 14:12, 19, 23, 28). ஆகியவைகளைக் குறிக்கப் பயன்பட முடியும். நடபடிகள் நூலில் லூக்கா இவ்வார்த்தையை உள்ளூர் சபையைக் குறிப்பதற்கே (அதாவது ஒரு குறிப்பிட்ட பகுதியில் உள்ள அனைத்து "அழைக்கப்பட்டவர்கள்") வழக்கமாகப் பயன்படுத்தினார்.

**சுவிசேஷம்** (euangelion) நற்செய்தி – "Gospel" நற்செய்தி என்ற வார்த்தையானது கிரேக்கக் கூட்டு வார்த்தையான euangelion என்பதிலிருந்து மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. Eu என்றால்

"நல்ல" என்று பொருள் படும். *Angelion* என்றால் "செய்தி" அல்லது "அலைகள்" என்று பொருள்படும். இவ்விதமாய், இந்த வார்த்தை, "நற்செய்தி" அல்லது "மகிழ்ச்சி அலைகள்" என்று பொருள்படுகின்றது. "Gospel" என்ற ஆங்கில வார்த்தை பழைய ஆங்கிலச் சொல்லான "god-spell" - இதுவும் "நற்செய்தி" என்றே பொருள்படும் - என்பதிலிருந்து வருகிறது. இவ்வார்த்தை எந்த ஒரு நற்செய்தியையும் குறிக்கக்கூடும், ஆனால் பொதுவாக, புதிய ஏற்பாட்டில் இது இயேசுவைப் பற்றிய நற்செய்தியையே குறிக்கின்றது. இந்த "நற்செய்தியை" கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகிய மூன்றும் உள்ள சத்தியமாக (1 கொரி. 15:1-4) பவுல் அடையாளப்படுத்தினார். நாம் நற்செய்திக்குக் "கீழ்ப்படிய" வேண்டுமாதலால் (ரோமர் 10:16; 1 பேது. 4:17; 2 தெச. 1:7), பூரண சுவிசேஷம் என்பது இயேசு நமக்குச் செய்துள்ளவற்றிற்கு நாம் எவ்விதத்தில் பதில் செயல் செய்கிறோம் என்பதையும் உள்ளடக்கியுள்ளது.

**பாதாளம்** (*hades*) - *Hades* – என்பதன் நேரடிப்பொருள் "காணப்படாதது" என்பதாகும், இது கிரேக்கர்களால் "காணப்படாத உலகம்" என்பதைக் குறிக்கப் பயன்படுத்தப் பட்டது. புதிய ஏற்பாட்டில் இயேசுவாலும், மற்றவர்களாலும் இது மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடையில் உள்ள நிலையைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது. லூக். 16:19-31ல் உள்ள ஐசுவரியவான், லாசரு ஆகியோரது உவமையில், காணப்படாத உலகத்தைப்பற்றிய கணநேரத் தோற்றம் தரப்படுகிறது.

**நரகம்** (*geenna*) – "hell" என்ற வார்த்தை KJVயில் மூன்று மாறுபட்ட வார்த்தைகளாக மொழியாக்கம் செய்யப் பட்டுள்ளது: (1) "Gehenna" (*geenna*) என்பது துன்மார்க்கர் சென்று சேரும் நித்திய இருப்பிடத்தைக் குறிக்கின்றது (நாம் சாதாரணமாக "நரகம்" என்று நினைக்குமிடம்). (2) "Tartarus" (*tartaroo*) வேதனையுள்ள இடம் - இது வேத வசனங்களில் ஒரே ஒருமுறை மட்டும் காணப்படுகிறது (2 பேது. 2:4), இவ்விடத்தில் பாவம் செய்த தூதர்களை நியாயத்தீர்ப்புக்கென்று அடைத்து வைக்கப்பட்ட இடமாக இது குறிப்பிடுகிறது. (3) "Hades" (*hades*) ("Hades" என்பதில் காண்க).

**இயேசு** (*Iesous*, “Yasous”) – *என்று உச்சரிக்கப்படும்) - “இயேசு” என்றால் “இரட்சகர்” என்று பொருள்படும் என்று கூறுவது பொதுவானதாகும், ஆனால் “இரட்சகர்” என்பதற்கு வேறொரு கிரேக்க வார்த்தை உண்டு: soter. தூதன், யோசேப் பிடம், “அவருக்கு இயேசு* [“*யேகோவா இரட்சிக்கின்றார்*”] *என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்” என்று கூறிய போது (மத். 1:21), உண்மையில் இயேசுவே யேகோவா (அதாவது தெய்வீகமானவர்) என்று கூறினார்! அந்நாட்களில் “இயேசு” என்பது ஒரு பொதுவான கிரேக்கப் பெயராய் இருந்தது (கொலோ. 4:11; அப். 13:6). “இயேசு” என்ற கிரேக்கப் பெயர் “யோசுவா” என்ற எபிரெயப் பெயருக்குச் சமமான தாகும், இது* “Jehoshua” *(“அதாவது யேகோவா இரட்சிக்கிறார்”) என்பதன் சுருக்கமாகும்.*

**இராஜ்யம்** (*basileia*) – *“இராஜ்யம்” என்று மொழியாக்கம் செய்யப்பட்ட கிரேக்க வார்த்தையானது “ஆட்சித் தலைமை மற்றும் ஆளுதல்” என்று பொருள் தருகிறது. சிறப்பான ஒரு பொருளில் இது தேவனுடைய அரசுரிமையைக் குறிக்கிறது. தேவன் ஒவ்வொன்றின் மேலும் ஆளுகை செய்கின்றார், ஆனால் புதிய ஏற்பாட்டில் “இராஜ்யம்” என்ற வார்த்தை, தேவன் தமது மக்களை ஆளுவதைக் குறிக்கவே பயன் படுத்தப்படுகின்றது (அதாவது, அவருடைய சட்டத்திற்குக் கீழ்ப்படிபவர்களைக் குறிக்கிறது). சில சமயங்களில் இந்தச் சொல்வழக்கு, சபையைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது (மத். 16:18); சில சமயங்களில் இது பரலோகத்தைக் குறிப்பிடப் பயன்படுத்தப்படுகிறது (2 பேது. 1:11). மறுவுருவாக்கப்பட்ட சொற்றொடர்களான “தேவனுடைய” அல்லது “பரலோகத் தின்” (இச்சொல் வழக்குகள் பெரும்பாலும் ஒன்றுக்கொன்று மாற்றிக்கொள்ளத் தக்க வகையில் பயன் படுத்தப்பட்டன) போன்றவைகளால் இதன் பொருள் முடிவு செய்யப்படாமல், சொற்பொருள் விளக்கும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு முடிவு செய்யப் படுகின்றது. நடபடிகளில் லூக்கா, “இராஜ்யம்” என்ற வார்த்தையை வழக்கமாக, சபையைக் குறிப்பதற்கே பயன் படுத்தினார், ஆனால் ஒருமுறை மட்டும் இதை அவர்*

*பரலோகத்தைக் குறிக்கப் பயன் படுத்தினார் (அப். 14:22).*

***மாரநாதா*** (*marana tha*) – *“கர்த்தர்” மற்றும் “வருகிறார்” என்ற அரமாயிக் மொழியின் வார்த்தைகள் இணைந்து* “maranatha” *என்ற வார்த்தையாயின, இது ஒரு கூற்றாகவோ (“கர்த்தர் வருகின்றார்”) அல்லது ஒரு ஊக்கமான ஜெபமாகவோ (“கர்த்தரே வாரும்!”) இருக்க முடியும்.*

***மேசியா*** – Messiah – *“கிறிஸ்து” வில் காண்க.*

**Premillennialism** – *ஆயிரம் ஆண்டு முன் அரசாட்சிக் கொள்கை -* “Premillennialism” *என்பது,* “Pre” *(“முன்னால்”) மற்றும்* “millennium” *(“ஆயிரம் ஆண்டுகள்”) ஆகிய இரு லத்தீன் வார்த்தைகளின் இணைவாகும். முற்சேர்க்கைச் சொல்லான* “pre” *என்பது கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறிக் கிறது. ஆயிரம் ஆண்டு முன் அரசாட்சிக் கொள்கைக்காரர்கள் வெளி. 20க்கு ஆயிரம் ஆண்டுகள் முன்னதாக கிறிஸ்து வருகி றார் என்று நம்புகின்றனர் (ஆயிரமாண்டு பின் அரசாட்சிக் கொள்கைக்காரர்கள், கிறிஸ்து ஆயிரம் ஆண்டு அரசாட்சிக்குப் பின்வருவதாக நம்புகின்றனர்). ஆயினும், ஆயிரமாண்டு முன் அரசாட்சிக் கொள்கையானது, கிறிஸ்துவின் மறுவருகையின் காலத்தைப்பற்றிக் குறிப்பிடுவதைக் காட்டிலும் அதிக சிக்க லான இறையியல் கோட்பாட்டை அணைத்து கொள்கிறது. இது கிறிஸ்து விரைவில் மீண்டும் வந்து தமது அரசாட்சியை எருசலேமில் ஏற்படுத்துவார் என்ற உருவில் ஒரு யுகக் கொள்கையைப் போதிக்கின்றது (ஆயிரமாண்டு முன் அரசாட்சிக் கொள்கைக்காரர்கள் பொதுவாக இராஜ்யத்திற்கும் சபைக்கும் இடையில் ஒரு வேறுபாட்டை உருவாக்குகின்ற னர்). அவர்களுடைய உபதேசத்தின்படி, எருசலேமில் உலகப் பிரகாரமான தாவீதின் அரியணையில் இயேசு அமருவார், ஆலயத்தை அவர் மறுபடியும் கட்டியெழுப்புவார் மற்றும் ஆயிரம் ஆண்டுகள் இப்பூமியின் மீது அவர் அரசாளுவார் என்று போதிக்கின்றனர். அவர்கள், வெளி. 20:2-5ல் உள்ள “ஆயிரம் ஆண்டுகள்” என்பது (வெளிப்படுத்தின விசேஷத்தில் உள்ள மற்ற பல எண்களைப் போலவே) அடையாளமாய்க் கூறப்பட்டது என்பதைப் புரிந்துகொள்ளத் தவறுகின்றனர்,*

இவ்வார்த்தை கிறிஸ்துவுக்கு "சகல அதிகாரமும்" கொடுக்கப் பட்டதைக் குறிக்கின்றது (மத். 28:18). அப். 2ல் முதல் நற்செய்திப் பிரசங்கத்தில், இயேசு தாவீதின் அரியணையில் அமர்ந்திருக்கிறார் என்றும், இப்பொழுது அவர் பரலோகத்தில் பிதாவின் வலது பாரிசத்தில் அமர்ந்து ஆளுகிறார் என்றும் பேதுரு அறிவித்தார். நடபடிகளின் அநேக பகுதிகள், ஆயிரமாண்டு முன் அரசாட்சிக் கொள்கைக்காரர்களின் தவறுகளை வெளிப்படுத்துகின்றன.

**Premillennialist** – *ஆயிரமாண்டு முன் அரசாட்சிக் கொள்கைக்காரர்கள்* - "Premillennialism"*மில் காண்க.*

***தீர்க்கதரிசனம்*** – Prophecy – "Prophet" *ல் காண்க.*

***தீர்க்கதரிசி*** – Prophet (*prophetes*) – *தீர்க்கதரிசிகள் எதிர்கால த்தை முன்னுரைப்பவர்கள் என்று பொதுவாக நாம் எண்ணுகின்றோம், மற்றும் பழைய ஏற்பாட்டில் இதுவே தீர்க்கதரிசிகளின் முக்கியமான பணியாக இருந்தது. ஆயினும், "தீர்க்கதரிசி" என்ற சொல் வழக்கின் அடிப்படைப் பொருள், "தேவனுக்காகப் பேசும் ஒரு மனிதர்" என்பதாகும். எதிர் காலத்தை முன்னுரைப்பது என்பது, கர்த்தருடைய செய்தியை வலியுறுத்தும் ஒரு வழியாகவே இருந்தது. தீர்க்கதரிசியின் செய்தியின் பாரம், அவருடைய நாட்களின் மக்களைப் பற்றியதாகும். ஆகவே, தீர்க்கதரிசி என்பவர் ஏவப்பட்ட ஒரு பேச்சாளர் என்று எண்ணுவதே சிறந்ததாகும். சில சமயங்களில் தீர்க்கதரிசி ஒரு "முன்னுரைப்பவராக" இருந்தார்; எப்போதும் அவர் "முன்னால் பேசுபவராக" இருந்தார்.*

***யூதமார்க்கத்தமைந்தவர்*** – Proselyte (*proselutos*) – "Proselyte" *என்பது proserchomai என்ற கிரேக்க வார்த்தையுடன் தொடர்புள்ளதாகும். இது* pros *("க்கு" அல்லது "நோக்கி") என்ற முன்னிடைச் சொல்லும், erchomai ("வருவதற்கு") என்ற சொல்லும் இணைந்ததாகும். புதிய ஏற்பாட்டில் இவ்வார்த்தை, யூதமார்க்கத்தைத் தழுவ வந்த புறஜாதியாரைக் குறிக்கிறது. யூதமார்க்கத்தமைந்தவர்கள் ஆவதற்கு மூன்று சடங்குகள் நிறைவேற்ற வேண்டியிருந்தது: (1) ஆண்களுக்கு விருத்த சேதனம்; (2) சாட்சிகளின் முன்னிலையில் ஒரு சுய ஞானஸ்*

*நானம் (முழுகுதல்); (3) பலி செலுத்துதல் (தேவாலயம் இருக்கும் வரை). விருத்தசேதனம் செய்ய வேண்டியிருந்ததால், ஆண்களைக் காட்டிலும் அதிகமான பெண்கள் மனமாற்றப் பட்டனர். புறஜாதி ஆண்களில் அநேகர் ''தேவனுக்குப் பயந்தவர்களாக மட்டும் - புறஜாதியாரில், உண்மையான தேவனை விசுவாசித்து, ஜெபக்கூட ஆராதனையில் பங்கெடுப் பார்கள், ஆனால் யூதமார்க்கத்தமைய மாட்டார்கள் - இருந்துகொள்வதை விரும்பினர்.*

***மனந்திரும்புதல்*** – Repent (*metanoeo*) – *மனந்திரும்புதல் - *“Repent” *என்ற வார்த்தை, “பிறகு”* (*meta*) *மற்றும் “சிந்தனை” (noema) என்ற இரு வார்த்தைகளின் கூட்டுச் சொல்லான கிரேக்க வார்த்தையிலிருந்து மொழியாக்கம் செய்யப்பட்டது. இதன் நேரடிப் பொருள், ஒருவரின் எண்ணங்களில் ஏற்படும் மாற்றம் என்பதைக் குறிக்கும் ''பிந்திய சிந்தனை'' ஆகும். (மனந் திரும்புதல் என்பது சிந்தனையில் ஏற்படுவது என்பதைக் கவனியுங்கள். இது metanoea என்பதை “தண்டம் செலுத்து” என்று கத்தோலிக்க வேதாகமத்தில் மொழியாக்கம் செய்யப் பட்டதிலிருந்து முரண்படுகிறது.) மனந்திரும்புதல் என்பது “சிந்தனையில் ஏற்படும் மாற்றம்” ஆகும் (இ.வ. மத். 21:29; எபி. 12:17ன் மொழியாக்கங்கள்), இவ்வகையில் இது தேவனுக்கும் பயன்படுத்தப்படலாம் (ஆதி. 6:6;* KJV*). ஆயினும், மனிதருக்கு இது பயன்படுத்தப்படுகையில், பொதுவாக இது “பாவத்தைப் பற்றி மனநிலையில் ஏற்படும் ஒரு மாற்றம்” என்றே குறிப்பிடப் படுகிறது - பொதுவாக பாவம் செய்வதை நிறுத்த எடுக்கும் ஒரு முடிவு/அல்லது குறிப்பிட்ட ஒரு பாவத்தை செய்வதை நிறுத்த எடுக்கும் முடிவு என்பதைக் குறிக்கிறது. தேவனுக்கேற்ற துக்கத்தின் விளைவாகவே மனந்திரும்புதல் உண்டாகின்றது (2 கொரி. 7:10ஐக் கவனிக்கவும்; “தேவனுடைய சித்தத்தின் படியான துக்கம்''* [KJV, *தேவனுக்கேற்ற துக்கம்*]*. இது “லௌகிகத் துக்கத்துடன்'' அதாவது பாவத்தின் விளைவாக ஏற்பட்ட துக்கத்துடன் முரண்படுவதாகக் காட்டப்படுகிறது). மனந்திரும்புதலின் விளைவாக வாழ்க்கையில் ஒரு மாற்றம் உண்டாகும் (அப். 26:20). மனந்திரும்புதலுக்கும், அதைத் தொடர்ந்து வாழ்க்கையில் ஏற்படும் மாறுதலுக்கும் இடையில்*

*உள்ள வேறுபாடு முக்கியமானது, பெந்தெகொஸ்தே நாளன்று, மூவாயிரம் பேர் அந்த நாளிலேயே "மனந்திரும்ப" முடிவு செய்தனர் (அப். 2:38-41), ஆனாலும் அம்முடிவை செயலாக்க (அதாவது தங்களின் வாழ்க்கையை மாற்றிக் கொள்ள) பல நாட்களாயிற்று.*

**Repentance** – "Repent" *என்பதில் காண்க.*

***எழுபதின்மர்*** – Septuagint – "Septuagint" *என்பது "எழுபது" என்ற பொருளுடைய லத்தீன் வார்த்தையாகும். செப்துவஜிந்த் என்பது கி.மு. 3ல் எழுதப்பட்ட பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பாகும். பாரம்பரியம் கூறுகின்றபடி, இது எழுபது மொழிபெயர்ப்பாளர்களால் ஏற்படுத்தப்பட்டது. புலமைப் பணிகளில், இம்மொழிபெயர்ப்பு பெரும்பாலும், எழுபதைக் குறிக்கும் ரோம எண் அமைப்பிலேயே* (LXX) *குறிக்கப்பட்டது. இயேசுவும், அப்போஸ்தலர்களும் பொதுவாக கிரேக்க மொழிபெயர்ப்பில் இருந்தே மேற்கோள் காட்டியமையால், அவர்களின் மேற்கோள்கள் பழைய ஏற்பாட்டு நூலிலிருந்து சற்று மாறுபட்டிருந்தன என்பதை விளக்க இது பயன்படுகின்றது.*

***பரிசேயர்கள்*** – Pharisees (*pharisaioi*) – *"பரிசேயர்கள்" என்பது "பிரிக்கப்பட்டவர்கள்" என்று பொருள்படும் எபிரெய வார்த்தையிலிருந்து வந்ததாகும். பழைய, புதிய ஏற்பாடுகளின் காலங்களுக்கு மத்தியில், மக்காபேயரின் ஆட்சிக் காலத்தில் இந்தக் குழு உண்டாயிற்று. இக்குழுவின் ஆதி வரலாற்றில், பரிசேயர்கள், குறிப்பிட்ட அரசியல் குழுக்களிலிருந்து தங்களைப் பிரித்துக் கொண்டனர். இயேசுவின் நாட்களில், இவர்கள் சடங்காச்சாரங்களில் சுத்தத்தைக் கடைப்பிடிக்காதவர்களிடமிருந்து பிரிந்தவர்களாகத் தங்களையே கண்டனர், மற்றும் இவர்களில் பலர் சாதாரண வாழ்க்கையிலிருந்து பிரிந்து நின்று, நியாயப்பிரமாணத்தின் சிறு அம்சத்தைக்கூடக் கடைப்பிடிப்பவர்களாகத் தனிப்பட்டிருந்தனர். யூத மார்க்கத்திலேயே "கண்டிப்பான சமயமாக" (அப். 26:5) இவர்கள் இருந்தனர். வேதபாரகரில் அநேகர் இந்த குழுவைச் சேர்ந்தவர்களாயிருந்தனர். தேவனுடைய கட்டளைகளுக்குச் சமமாக,*

*மனுஷருடைய பாரம்பரியங்களும் கட்டுப்படுத்துகின்றது என்று அவர்கள் கருதியதால் (மத். 15:1-9), இந்நாட்களில் நாம் அவர்களை இறையியல் "நியாயப்பிரமாணிக்கர்கள்" என்று குறிப்பிடலாம். நிக்கொதேமு ஒரு பரிசேயர் (யோவா. 3:1), பவுல் ஒரு பரிசேயர் (பிலி. 3:5; கலா. 1:14). இக்குழுவில் அதிக எண்ணிக்கையில் ஆட்கள் இருக்கவில்லை என்று யோசிப்பஸின் எழுத்துக்கள் சுட்டிக்காட்டுகின்றன; இயேசுவின் நாட்களில் இக்குழுவில் ஏறக்குறைய ஆறாயிரம் பேர் மட்டுமே இருந்தனர். இவர்கள் சதுசேயரிலிருந்து அநேக வழிகளில் மாறுபட்டிருந்தனர்: இவர்களிடம் அரசியல் குறிக்கோள் எதுவும் இல்லை; இவர்கள் ஆவிகளை, தூதர்களை மற்றும் மரித்தோரின் உயிர்த்தெழுதலை நம்பினார்கள் (அப். 23:8); மக்களிடத்தில் இவர்கள் புகழ் பெற்று விளங்கினர்; இவர்களில் சிலர் கிறிஸ்தவர்களாயினர் (அப். 15:5; 23:6); எருசலேமின் அழிவுக்குப் பிறகும் கூட இவர்களின் குழு தொடர்ந்து இருந்து வந்தது.*

***சதுசேயர்கள்*** – Sadducees (*Saddoukaioi*) – *பழைய, புதிய ஏற்பாடுகளின் இடைப்பட்ட காலத்தில் சதுசேயர் என்ற சமயக் குழு உண்டாயிற்று. இவர்கள் செல்வம் படைத்த, உயர்குடிக் குழுவாக இருந்தனர். பலஸ்தீனத்தில் இவர்களின் எண்ணிக்கை குறைவாயிருப்பினும், ரோமாபுரியோடு ஒத்துழைக்க இவர்கள் கொண்டிருந்த விருப்பத்தினால், குறிப்பிடத்தக்க அதிகாரத்தை யும், செல்வாக்கையும் இவர்கள் ஏற்படுத்திக் கொண்டனர். ஏரோதின் ஆட்சிக்காலத்திலிருந்து, கி.பி. எழுபதில் ஏற்பட்ட எருசலேமின் பேரழிவு வரையிலும் நியமனமான ஒவ்வொரு பிரதான ஆசாரியரும் இவர்களின் குழுவைச் சேர்ந்தவராகவே இருந்தனர். சதுசேயர்கள் பகுத்தறிவாளர்கள் ஆவார்கள் (நாம் இவர்களை இறையியல் "தாராளமய" கொள்கையுள்ளவர்கள் என்று குறிப்பிடலாம்): ஆவி உலகையோ, உயிர்த்தெழு தலையோ அல்லது மரணத்திற்குப் பிறகுள்ள வாழ்வையோ இவர்கள் நம்புவதில்லை (மாற். 12:18; அப். 23:6-8). யூதர்கள் ரோமாபுரிக்கு எதிராகக் கலகம் செய்தபோது, சதுசேயர்கள் ரோமாபுரியோடு கூட்டுறவு வைத்திருந்ததற்காக செலோத்தே என்னப்பட்டவர்களால் கொல்லப்பட்டனர்.*

***சனதெரீன்*** – Sanhedrin (*sunedrion*) – *Sunedrion* என்பது "ஒன்று கூடி அமர்தல்" என்று பொருள்படும் ஒரு கூட்டு வார்த்தை யாகும். *Sunedrion* என்ற வார்த்தை சில வேளைகளில் நியாயம் செய்ய அமரும் ஒரு உள்ளூர்ச் சங்கத்தைக் குறித்தது (மத். 10:17). ஆயினும், புதிய ஏற்பாட்டில் இது வழக்கமாக, யூதர்களின் தேசிய சங்கத்தைக் குறிக்கவே பயன்படுத்தப் பட்டது (யூதர்களின் ''உயர்நீதி மன்றம்''). KJVயிலும் NASBயிலும் இவ்வார்த்தை ''சங்கத்தார்'' என்றும் NIVயில் அடிக்கடி இது ''சனதெரீன்'' என்றும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டில் இது "இஸ்ரவேல் புத்திரரின் மூப்பர்களுடைய சங்கம்" ( அப். 5:21) என்றும் அழைக்கப் படுகிறது. சனதெரீன் சங்கமானது, முதன்முதலாக கி.மு. 200ல் யூதநாட்டில் உள் விவகாரங்களைத் தீர்த்து வைக்கும் அமைப் பாகத் தோன்றியது. கி.பி. 66ல் யூதர்கள் ரோமாபுரிக்கு எதிராகக் கலகம் செய்த நாட்கள் வரையிலும் இது இப்பணியைத் தொடர்ந்து வந்தது. பாரம்பரியமாக, சனதெரீனில் எழுபது உறுப்பினர்கள் இருந்தனர் (இவர்கள் தங்களை மோசேயின் ஆலோசனை சங்கத்திலிருந்த எழுபது பேரின் பின்வழி வந்தவர்களாக கருதினர், எண். 11:10-25) - இவர்களுடன் பிரதான ஆசாரியர் தலைவராக இருந்தார். இந்த உறுப்பினர் களில் பெரும்பாலானவர்கள் சதுசேய சமயத்தவராவார்கள் (அப். 5:17) ("Sadducees" என்பதில் காணவும்), ஆனால் சங்கத்தில் வல்லமையுள்ள ஒரு சிறுபான்மையினாராகப் பரிசேய சமயத்தாரும் இருந்தனர் (வேதபாரகரில் அநேகர் பரிசேயர் களாய் இருந்தனர்) ("Pharisees" என்பதில் காண்க). மற்ற பொறுப்புக்களுடன், ஆலோசனைச் சங்கத்தில் இருந்தவர்கள் சுயமாக நியமித்துக்கொண்ட யூத விசுவாசமுள்ள காவலர்களாகவும் இருந்தனர் (புதிய உபதேசங்கள் மற்றும் போதகர்களைப் பரிசீலித்தல்; உபாகமம் 13ஐக் காணவும்).